# யாழ்/உயரப்புலம் மெதடிஸ் மிசன் தமிழ்க் கலவன் வித்தியாலயம்

## பரிசுத் தினம் - 2013

காலம் - 20.06.2013

நேரம் - மு.ப 9.30 வியாழக்கிழமை

இடம் - வித்தியாலய பிரதான மண்டபம்

### தலைவர்

**திரு.கு.திலீபன்**
(வித்தியாலய முதல்வர்)

### பிரதம விருந்தினர்

**திரு.செ.உதயகுமார்**
(வலயக்கல்விப் பணிப்பாளர் - யாழ்ப்பாணம்)

### சிறப்பு விருந்தினர்கள்

**திரு.பொ.அருணகிரிநாதன்**
(பிரதிக் கல்விப்பணிப்பாளர், யாழ் கல்வி வலயம்)

### கௌரவ விருந்தினர்

**திருமதி.பெ.அமுதா**
(பழைய மாணவி)

### பரிசில் வழங்கல்

**திருமதி.நந்தினி உதயகுமார்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சி நிரல்

☞ விருந்தினர்களை வரவேற்றல்

☞ கொடியேற்றல்

☞ மங்கல விளக்கேற்றல்

☞ வரவேற்பு நடனம்

☞ வரவேற்புரை

☞ அதிபரின் பரிசுத்தின அறிக்கை

☞ பிரதம விருந்தினர் உரை

☞ பரிசில்கள் வழங்குதல்

☞ கலை நிகழ்வுகள்

☞ நன்றியுரை

☞ பாடசாலைக் கீதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி

*உயரப்புலம் கிராம மக்களின் அறிவுப் பொக்கிஷமாகத் திகழும் யாழ்/உயரப்புலம் மெதடிஸ் மிசன் தமிழ் கலவன் பாடசாலையின் இவ்வருடத்திற்கான பரிசுத் தின விழா மலருக்கு ஆசியுரை வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.*

*யாழ்/உயரப்புலம் மெதடிஸ் மிசன் தமிழ் கலவன் பாடசாலையின் வளர்ச்சிக்காக தம்மையே அர்ப்பணித்து அரும்பணியாற்றிக் கொண்டிருக்கும் பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், நலன் விரும்பிகள் அனைவருக்கும் எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக "இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்" பாடசாலையின் பரிசளிப்பு விழாவின் இன்றைய நாயகர்களான மாணவச் செல்வங்கள், எமது அன்னை பூமியின் நல்ல தலைவர்களாக உயர்வடைய வேண்டும் என வாழ்த்துவதுடன் இறைவனின் நல்லாசியும் கிடைக்க இறைவனை வேண்டுகின்றேன்.*

*உயரப்புலம் மெதடிஸ் மிசன் தமிழ் கலவன் பாடசாலையின் இவ்வருடத்திற்கான பரிசுத்தின விழாவும் வெற்றிகரமாக அமைய வேண்டும் என இறைவனை பிரார்த்திப்பதுடன், பரிசுத்தின விழாவிலே பரிசில்களைப் பெறவுள்ள மாணவச் செல்வங்களுக்கு எமது ஆலயம் சார்ந்த நல்லாசிகளை வழங்குவதுடன், இவ்வருட பரிசுத்தின விழாவானது மேன்மேலும் சிறப்பாக நடைபெற வீரமா பிடாரி அம்பாளின் நல்லாசிகளும் உரித்தாகட்டும்.*

பிரம்ம ஸ்ரீ சோ.முரளீதரசர்மா
ஆலய குரு
ஸ்ரீ வீரமாபிடாரிஅம்பாள் தேவஸ்தானம்
ஆனைக்கோட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி

கல்விக்கென்றொரு விளைநிலமாகத் திகழும் யாழ்/உயரப்புலம் மெதடிஸ் மிசன் தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவுக்கு ஆசியுரை நல்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

பணி, ஒத்துழைப்பு, முயற்சி, உறுதுணை என்பன ஒருங்கே திரட்டி மாணவ, மாணவியருக்கு கல்வியுடன் கூடிய நல்வழிகளையும் எடுத்தியம்பிக் கொண்டிருக்கும் பாடசாலை சார் சமூகத்தின் அயராத சேவை பாராட்டப்படத்தக்கது.

அவ்விதமே மாணவர்களுக்குக் கல்வியை மட்டுமன்றி விளையாட்டு, கலைத்துறை, தலைமைத்துவம் மற்றும் தொழில்நுட்பம் போன்ற பல்வேறு துறைகளிலும் ஊக்குவிப்பை வழங்கிவருவது மெச்சத்தக்கது. மாணவ மாணவியர்களை தகுந்தபடி பயிற்றுவித்து பல போட்டி நிகழ்வுகளில் பங்கு பெறச்செய்து அவர்கள் சாதனைகளை சரித்திரத்தில் குறித்திடும் மகிழ்ச்சியின் ஓர் நாளான இன்றைய பரிசளிப்பு விழாவைப் போல எதிர் கொள்ளவிருக்கும் காலங்களிலும் பல வெற்றிக்கணைகளை எய்த வேண்டும்.

" முகம் மலர வேண்டுமானால், அகம் மலர வேண்டும்;
அகம் மலர வேண்டுமானால், இறை அருள் மலர வேண்டும்"

என்பதற்கிணங்க கல்வி எனும் மலர்தனை விளையச் செய்வதற்கான ஒரு வாய்ப்பான கல்வி அகமாக மலர்விக்கப்பட்ட இப்பாடசாலையில் பல மனங்களின் மலர்ச்சிகளை அர்ப்பணிப்புடன் நல்கிவரும் பணிகள் மேலும் செழிப்புடன் தொடர இறைவன் தமது அருளையும் நல்லாசியையும் பொழிந்தருள்வாராக.

அருட்பணி அன்ரனி சவரிமுத்து
தென்னிந்திய திருச்சபை
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தியாலய முதல்வரின் பரிசுத்தின அறிக்கை

*எல்லாம் வல்ல இறவனின் அருள் வேண்டி,*

- வணக்கத்திற்குரிய மதப்பெரியோர்களே!
- எமது அன்புக்கும் பெருமதிப்பிற்குமுரிய முதன்மை விருந்தினர் அவர்களே!
- அவர்தம் பாரியார் வைத்திய பெருந்தகை திருமதி.நந்தினி உதயகுமார் அவர்களே!
- எமது சிறப்பு விருந்தினர் திரு.பொ.அருணகிரிநாதன் அவர்களே!
- கௌரவ விருந்தினர் திருமதி.பெ.அமுதா அவர்களே! அவர்களின் உறவினர்களே!
- கௌரவ ஆளுநரின் ஊடக இணைப்பாளர் திரு.கை.நந்தகுமார் அவர்களே!
- கோட்டக் கல்விப்பணிப்பாளர் அவர்களே!
- உதவிக் கல்விப்பணிப்பாளர்களே!
- சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களே!
- இப் பாடசாலையின் முன்னாள் அதிபர்களே, ஆசிரியர்களே!
- அபிவிருத்திக் குழு உறுப்பினர்களே!
- அபிவிருத்தி சங்க உறுப்பினர்களே!
- பழைய மாணவர் சங்க உறுப்பினர்களே!
- பழைய மாணவர்களே!
- அயற்பாடசாலை அதிபர்களே, ஆசிரியர்களே!
- முன்பள்ளி ஆசிரியர்களே!
- நலன் விரும்பிகளே!
- பெற்றோர்களே!
- அன்புக்குரிய ஆசிரியர்களே!
- மாணவச் செல்வங்களே!

உங்கள் அனைவருக்கும் எமது அன்பார்ந்த வணக்கங்கள்

யா/ உயரப்புலம் மெதடிஸ் மிசன் தமிழ்க் கலவன் வித்தியாலயம் தனது பரிசளிப்பு விழாவிற்கு வருகை தந்த அனைவரையும் உள்ளத்தில் உவகையுடன் வரவேற்பதில் பெருமகிழ்வடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இப்பாடசாலையின் வரலாற்றில் மிக நீண்ட காலமாக பரிசளிப்பு விழா நடைபெறாத குறையை நிவர்த்தி செய்யும் வகையில் கடந்த இரண்டு வருடங்களாக சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இந்த வகையில் இப் பரிசளிப்பு விழா நிகழ்வானது இம் முறையும் நடைபெறுவதற்கு இறைவனின் அருளும் ஆசியும் எம்பக்கம் இருப்பதையிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றோம்.*

பெருமதிப்பிற்குரிய முதன்மை விருந்தினர் அவர்களே!

*இன்றைய விழாவிற்கு உங்களது வருகை மேலும் பெருமை சேர்க்கின்றது. பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.செல்லத்துரை.உதயகுமார் அவர்கள் வடமராட்சியின் புகழ் பூத்த ஹாட்லிக் கல்லூரியில் கல்வி கற்று விஞ்ஞான பட்டதாரியாக மிளிர்ந்தவர். பட்டபின் கல்விடிப்ளோமா பயின்று இந்தியப் பல்கலைக்கழகத்தில் முதுகலை மானிப் பட்டம் பெற்ற சிறந்த கல்விமானும் ஆவர். தனது ஆசிரிய முதல் பணியை 1987ம் ஆண்டு சிலாபம் நஸ்ரியா முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் ஆரம்பித்தீர்கள் 1993ம் ஆண்டு இலங்கை கல்வி நிர்வாக திறந்த போட்டிப் பரீட்சையில் சித்திய டைந்தீர்கள். தென்மராட்சி வலய கல்வி அபிவிருத்தி பிரிவில் பிரதிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி தொடர்ந்து வடமராட்சி, கிளிநொச்சி கல்விவலயங் களில் கல்வி நிர்வாக பிரதிக்கல்விப் பணிப்பாளராகவும் வடமாகாண கல்வித் திணைக்கள மேலதிக மாகாணகல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றி கல்வித் துறைக்கு பெரும் பணியாற்றியுள்ளீர்கள். இன்று யாழ் வலயக் கல்விப்பணிபாளராக பணியாற்றிக் கொண்டிருக்கும் தங்கள் மனவுறுதியும், அமைதியும், அடக்கமும் கொண்ட சிறந்த நிர்வாக செயல் வீரனகாவும் விளங்கும் தங்களை வரவேற்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.*

*பரிசில்கள் வழங்கி சிறப்பிக்க இருக்கும் திருமதி.நந்தினி உதயகுமார் அவர்கள் பாடசாலைகள் பற்சிகிச்சை அலகின் வைத்தியராக கடமையாற்றி வருகின்றார். மாணவர்களின் உடல் ஆரோக்கிய நலனில் மிகுந்த அக்கறையுடையவர். இவர் எந்நேரமும் சுறுசுறுப்புடன் கடமையை சிறந்த முறையில் சரிவரச் செய்பவர். அவரது கரங்களால் மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட இருப்பதையிட்டு பாடசாலைச் சமூகம் பெருமிதமடைகிறது.*

*இன்றைய விழாவிற்கு வருகை தந்து எமது பாடசாலை மாணவச் செல்வங் களுக்கு தங்கள் கைகளால் வழங்கப் படுகின்ற பதக்கங்களையும், பரிசில் களையும் நன் மதிப்பிதழ்களையும் பெற்ற மாணவர்கள் பேருவகை அடைந்து அறிவூ க்க முயற்சிகளில் மென்மேலும் ஈடுபட்டு கற்றலில் அதிக ஈடுபாடு கொண்டு மேன்மையடைவதோடு இந்நிகழ்வு ஏனைய மாணவருக்கும் ஊக்கத்தை கொடுத்து கற்றலில் ஆர்வம் ஏற்பட வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை. எமது வலயக் கல்விப் பணிப்பாளர் அவர்களின் பாரியார் திருமதி.நந்தினி.உதயகுமார் அவர்களையும் அன்போடு வரவேற்பதில் பெருமகிழ் வடைகின்றோம்.*

சிறப்பு விருந்தினராக வருகை தந்திருக்கும் திரு.பொ.அருணகிரிநாதன் அவர்களே!

*இந் நிகழ்விலே சிறப்பு விருந்தினராக வருகை தந்திருக்கின்ற எமது அன்பிற்கும் பெரும் மதிப்பிற்குமுரிய திரு.பொ.அருண கிரிநாதன் அவர்கள் தனது ஆரம்பக் கல்வியை வேலணை மேற்கு நடராசா வித்தியாலயத்திலும், இடைநிலைக் கல்வியை வேலணை மத்திய கல்லூரியிலும் பயின்று யாழ் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்று பட்டதாரியாக மிளிர்ந்தவர் தொடர்ந்து யாழ் பல்கலைக் கழகத்திலேயே கல்வி முதுகலைமானிப் பட்டத்தையும் பெற்று சிறந்த ஆசிரியராகத் திகழ்ந்தீர்கள். 1984ம் ஆண்டு மலைநாட்டில் தங்களது ஆசிரிய முதல்பணியை ஆரம்பித்தீர்கள். தொடர்ந்து கரம்பொன் சண்முகநாதன் மகாவித்தியாலயத்தில் ஆசிரியராக கடமையாற்றினீர்கள். 1992ம் ஆண்டு தொடக்கம் வேலணை சைவப் பிரகாச வித்தியாலத்திலும் 2002ம் ஆண்டு தொடக்கம் வேலணை மத்திய கல்லூரியிலும் தங்களது அதிபர் பணியை தொடர்ந்தீர்கள். அத்துடன் தீவக கல்வி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலயத்தின் பிரதிக்கல்விப் பணிப்பாளராகவும் தொடர்ந்து யாழ்ப்பாண கல்வி வலயத்தின் கல்வி அபிவிருத்தி பிரிவில் பிரதிக்கல்விப் பணிப்பாளராகவும் பணியாற்றி வருகின்றீர்கள்.

கல்விப்பணியுடன் மட்டும் நின்றுவிடாது சிறந்த சமூகப்பணியிலும் சமயப்பணியிலும் தங்களை இணைத்துக்கொண்டு இருப்பது தங்களின் சமூகப்பற்றை எடுத்துக்காட்டி நிற்கின்றது. வேலணை முடிப்பிள்ளையார் கோயிலின் பரிபாலன சபையின் தலைவராக விளங்கும் தாங்கள் ஆசிரியர்கள் தொடர்ந்து தமது வாண்மை விருத்திகளை வளர்த்துக்கொண்டு கல்விப் பணியில் பதவி உயர்வுகளைப் பெற்று தங்களை உயர்த்திக்கொள்ள முன்வர வேண்டும் என அடிக்கடி கூறிக் கொள்வீர்கள் அதன்படியே ஆசிரியராக நியமனம் பெற்ற தாங்கள் இன்று வரை பல பதவிகளைத் தாங்கி மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் மட்டும் முன்மாதிரியாக இராது சமூகத்திற்கும் முன்மாதிரியாக திகழும் தாங்கள் இன்றைய பரிசளிப்பு விழாவிற்கு சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு இருப்பது நாம் பெறும் பாக்கியமே என்றால் மிகையாகாது.

**கௌரவ விருந்தினர் திருமதி.பெனடிக் அமுதா அவர்களே!**

இப்பாடசாலையில் கல்விகற்று அதன் பின் சிலகாலம் இங்கேயே ஆசிரியராகப் பணிபுரிந்த பழைய மாணவியான திருமதி.பெ.அமுதா தாங்கள் புலம்பெயர்ந்து சென்றாலும் கல்விகற்ற பாடசாலையை மறவாது இலண்டன் பழையமாணவர் சங்கத்தை நிறுவி பாடசாலை பரிசளிப்பு விழா, விளையாட்டுப் போட்டி நிகழ்வுகளுக்கும் நிதியுதவி செய்தீர்கள். இதே போன்று இன்று நடைபெறும் பரிசளிப்பு விழாவிற்கும் தங்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. தாங்கள் தற்போது வருகை தராவிட்டாலும் தங்களுக்கு இந்நேரத்தில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

**வட மாகாண கௌரவ ஆளுனரின் ஊடக இணைப்பாளர்**
**திரு.கைலாயபிள்ளை.நந்தகுமார்**
**அவர்களே!**

எமது பாடசாலையின் வளர்ச்சிக்கான தேவைகளை கேட்டறிந்து உயர் அதிகாரிகளை இனங்கண்டு அவர்கள் மூலம் எமது பாடசாலைக்குப் பல உதவிகளைப் பெற்றுத்தந்த தங்களின் உதவிக்கு நன்றி கூறுவதுடன் இனிவரும் காலத்திலும் எமது பாடசாலையின் வளர்ச்சியில் கைகோர்த்து செயற்படுமாறு நாம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இவ் விழாவிற்கு வருகை தந்திருக்கின்ற பிரதம விருந்தினர் திரு.செ.உதயகுமார் அவர்களே! அவர்தம் பாரியார் திருமதி. நந்தினி.உதயகுமார் அவர்களே! சிறப்பு விருந்தினர் திரு.பொ.அருணகிரிநாதன் அவர்களே! கௌரவ விருந்தினர் திருமதி. பெ.அமுதா அவர்களே! அவர்தம் உறவினர்களே! பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்களே! பழைய மாணவர்களே! பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்களே! வெளிநாட்டில் இருந்து உதவி வழங்கிக் கொண்டிருக்கும் கல்வி அபிவிருத்திக்குழு உறுப்பினர்களே! பழையமாணவர் சங்க உறுப்பினர்களே! பெற்றோர்களே! அயற்பாடசாலை அதிபர்களே! ஆசிரியர்களே! நலன் விரும்பிகளே! எமது பாடசாலையின் ஆசிரியர்களே! அவர்தம் குடும்பஉறுப்பினர்களே! அன்புக்குரிய மாணவச் செல்வங்களே! உங்கள் அனைவரையும் இந்நன் நாளில் இருகரம் கூப்பி வரவேற்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

எமது பாடசாலை 1876ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 127 வருடங்கள் கடந்த மிக நீண்ட கல்விப்பாரம்பரியம் மிக்க ஓர் பாடசாலையாகும். இது தரம் 1 தொடக்கம் 11 வரையான வகுப்புக்களைக் கொண்ட ஓர் இடைநிலைப் பாடசாலையாகும். இங்கு கற்கும் மாணவர்களில் கூடிய பங்கினர் பொருளாதார நலிவுற்ற குடும்பப் பின்னணியைச் சார்ந்தவர்கள். கற்றலுக்கு வறுமை ஒரு தடையல்ல என்ற ஆன்றோர் வாக்கிற்கு அமைய எமது பாடசாலையின் மகுட வாசகம் **"சிந்தனை விருட்சமாகுக"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதாகும். மாணவர்களின் உள்ளக் கிடங்கை கிளறி அவர்களிடம் உள்ளார்ந்து மறைந்திருக்கும் ஆற்றல்களை வெளிக் கொணர்ந்து சமூகத்தில் உயர்ந்த நிலையை ஏற்படுத்துவதே இதன் கருத்தாகும். இதற்காக எமது ஆசிரியர்கள் ஒவ்வொரு மாணவர்களையும் இனங்கண்டு அவர்களுக்கு ஏற்ற வகையில் கற்பித்தற் செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்கின்றனர். அத்துடன் மாணவர்கள் ஒவ்வொருவரினதும் குடும்பப் பின்னணிகளை நன்கு அறிந்து அவர்களுக்கு வேண்டிய ஆலோசனைகளும் தரமான கல்வியும் முன்னெடுத்துச் செல்கின்றனர். இதற்காக தரமான உள்ளீட்டுப் பொருட்கள் சகல பாடங்களுக்கும் பொருத்தமான வகையில் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. வகுப்பறைக் கற்றலுடன் மட்டும் நின்றுவிடாது களச்செயற்பாடுகளுக்கும் நாம் முன்னுரிமை வழங்குவது உயிரோட்டமான கற்றல் -கற்பித்தல் செயற்பாட்டை உறுதிப் படுத்துகின்றது. இதற்காக நாம் வருடா வருடம் கல்விச்சுற்றுலாக்களை ஒழுங்கு செய்கின்றோம். ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு மாவட்டத்திற்கு உள்ளான களப்பயணங்களையும் இடைநிலைப்பிரிவு மாணவர்களுக்கு மாவட்டத்திற்கு வெளியிலான களப்பயணங்களையும் திட்டமிடுகின்றோம்.

கற்றலுடன் மட்டும் நின்றுவிடாது இணைபாடவிதான செயற்பாடுகளையும் சரியான முறையில் திட்டமிட்டு முன்னெடுப்பதில் நாம் வெற்றியடைந்துள்ளோம். கோட்ட மட்ட விளையாட்டுப் போட்டிகளில் எமது மாணவர்கள் 11 இடங்களைப் பெற்றுக் கொண்டனர். இதில் 6 முதலிடங்கள் கிடைக்கப்பெற்றது முன்னேற்றத்திற்கான முதற் படியைக் காட்டுகின்றது. அதேவேளை செல்வி.ஜெ. ஜெனார்த்தனி 19 வயதுப் பிரிவில் 400மீ ஓட்டம், 800மீ ஓட்டம், 1500மீ ஓட்டம் ஆகிய நிகழ்வுகளில் கோட்ட மட்ட, வலயமட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது பாராட்டக் கூடிய விடயமாகும். சென்ற வருடத்துடன் ஒப்பிடும் போது எமது இணைபாட விதான செயற்பாடுகள் 50சதவீதத்தினால் அதிகரித்திருப்பது மகிழ்ச்சியை அளிக்கின்றது. இதேவேளை நல்லூர் கோட்ட மட்ட நிகழ்வுகளில் கூடிய வெற்றிகளை பெற்ற வகை II பாடசாலைகளில் வலய ரீதியான தரவரிசையில் முதலாம் இடத்தில் எமது பாடசாலை திகழ்கின்றது.

எமது பாடசாலையின் 17 வயதுப் பிரிவு வலைப்பந்தாட்ட பெண்கள் அணியினர் கோட்டமட்ட பிரபல பாடசாலை அணிகளுடன் போட்டியிட்டு 3ம் இடத்தைப் பெற்றுக்கொண்டது குறிப்பிடக் கூடிய விடயமாகும்.

இதேவேளை பாடசாலையில் மாலை நேரத்தில் வலைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், (ஆண்,பெண்) துடுப்பாட்டம் (ஆண்,பெண்) ஆகிய விளையாட்டுக்களுக்கு விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவது இணைபாட விதான செயற்பாடுகளுக்கு பக்கபலமாக உள்ளது.

இவ்வருடம் நடைபெற்ற கோட்மட்ட தமிழ்த்தினப் போட்டியில் பிரிவு I இசையும் அசைவும் நிகழ்ச்சியில் செல்வி.அ.ஜெமீமா 3ம் இடத்தைப் பெற்றுக்கொண்டது, பாடசாலையின் முன்னேற்றத்தை சுட்டி நிற்கின்றது.

இவை எல்லாவற்றிற்கும் மகுடம் வைத்தாற் போன்று எமது ஆசிரியர்களின் அயராத உழைப்பினால் கடந்த வருடம் 2012ம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. (சா/த) பரீட்சையில் எங்கள் மாணவர்களில் 56சதவீதமானவர்கள் சித்திபெற்று க.பொ.த (உ/தர) கற்பதற்கு தகுதி பெற்றுள்ளனர். இச்சித்தி வீதமானது கடந்த இரு தசாப்தகாலப் பகுதியில் நடைபெறாத வரலாற்றுச் சாதனையாக விளங்குகின்றது என பழையமாணவர்களே சுட்டிக்காட்டியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. வலய ரீதியில் க.பொ.த (சா/த) பரீட்சை சித்தித்தர அதிகரிப்பு வரிசையில் எமது பாடசாலை இரண்டாம் இடத்தை பெற்றுள்ளது. எங்கள் மாணவர்கள் சைவசமயம், கத்தோலிக்க சமயம், தமிழ், சங்கீதம், மனைப் பொருளியியல் ஆகிய பாடங்களில் 100வீத சித்தியை பெற்றுள்ளனர். தமிழ் பாட சித்திவீதமானது யாழ்ப்பாண வலயத்திலுள்ள பாடசாலைகளின் தரவரிசையில் பிரபல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய பாடசாலைகளுக்கு அடுத்த படியாக மூன்றாம் இடத்தில் இருப்பது எமது ஆசிரியர்களின் அயராத உழைப்புக்கு கிடைத்த வெற்றியாகும். இவ்வெற்றிக்கு பாடசாலையின் ஆசிரியர் குழாம் முன்னெடுத்துச் செல்லும் பரிகார கற்பித்தல் வகுப்பும் ஒரு காரணமாகும்.

## பௌதீக வளங்கள்
## காணியும் கட்டடமும்

எமது பாடசாலைக் காணியின் விஷ்த்தீரணம் 0.83 ஏக்கர் ஆகும். இதில் கட்டடத் தொகுதி 668 சதுர மீற்றர் பரப்பில் அமைந்துள்ளது. வடக்கின் வசந்தம் நிதியின் மூலம் 90X25 அடி விஷ்த்தீரணத்தால் மாடிக் கட்டடம் அமைக்கப்பட்டு பாடசாலையின் எடுப்பான தோற்றத்தை சுட்டிக் காட்டி நிற்கின்றது.

இந் நேரத்தில் இக்கட்டடம் அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்த வடமாகாண கௌரவ ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி அவர்களுக்கும், கௌரவ அமைச்சர் கே.எஸ்.டக்ளஸ்தேவானந்தா அவர்களுக்கும், கௌரவ ஆளுநரின் செயலாளர் திரு.இ.இளங்கோவன் அவர்களுக்கும், இந்நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இதற்கு எமக்கு பக்கபலமாக இருந்து எமது தேவைகளை இனங்கண்டு இவ்வுதவிகளை பெற்றுத்தர காரணகர்த்தாவாக இருந்த திரு.கை.நந்தகுமார் அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

எமது பாடசாலையின் தெற்குப்பகுதி கம்பி வேலிகளை கல்வேலிகளாக மாற்றித்தந்த எமது பாடசாலையின் அயலவர்களுக்கும் இந் நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எமது பாடசாலையில் மிக நீண்ட காலமாக மலசல கூடவசதி போதாமை பெரும் குறைபாடாக இருந்து வந்துள்ளது. வடமாகாண கௌரவ ஆளுநர்,பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அமைச்சர், மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர், வடமாகாண கௌரவ ஆளுநரின் செயலாளர் ஆகியோரின் கூட்டு முயற்சியினால் பாடசாலையின் மேற்குத் திசை மூலையில் 4 மலசல கூட அறைகள் கட்டுவதற்கு நிதியினை ஒதுக்கீடு செய்த தாங்கள் ஒவ்வொருவருக்கும் இந்நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

UNDP நிறுவனத்தின் மூலம் பாடசாலைகளுக்கு இடையிலான கலாச்சார நிகழ்ச்சித்திட்டம் திட்டமிட்டபடி வெற்றிகரமாக நடாத்தி முடிக்கப்பட்டது. இதற்கு முன்னோடியாக பாடசாலைக்கு மலசல கூடம் ஒன்று காக்கைதீவு மக்களின் சிரமதானம் மூலம் அமைத்துத் தரப்பட்டது. இவர்களுக்கும் இவ்வேளையில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது பாடசாலையின் உள்ளகக் கவின் கலையை ஏற்படுத்துவது பற்றி பழைய மாணவர்களுடன் கலந்துரையாடிய போது பழையமாணவி. யோகச்சந்திரன். ரவிச்சந்திரிக்கா அவர்களின் நிதியுதவியின் மூலம் பூம்பாத்திகள் அமைக்கப்பட்டு பூங்கன்றுகள் நாட்டப்பட்டுள்ளது. அவர்களுக்கும் எமது நன்றிகள்.

இதேவேளை பாடசாலை அலுவலகம் மாற்றியமைக்கப்பட்டு நவீன மயப்படுத்தும் தேவை ஏற்பட்ட போது கனடாவில் இருந்து வருகை தந்த பழைய மாணவன் திரு.அ.ராஜீவ் அவர்கள் மூலம் மிகக் குறுகிய காலத்தில் இரண்டு அறைகள் அலுவலகங்களாக நவீன முறையில் மாற்றியமைக்கப்பட்டது. அதிபர், உபஅதிபர், அலுவலகங்கள் பழைய மாணவன் அ.ராஜீவ் மூலமாகவே 04.03.2013 அன்று திறந்துவைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

எமது பாடசாலையின் பழைய மாணவர்கள் பாடசாலையின் வளர்ச்சியில் கூடிய பங்களிப்பை வழங்குகின்றார்கள் என்று கூறுவது மிகையாகாது. பாடசாலையின் விளையாட்டுப் போட்டி, பரிசளிப்பு விழா, ஆசிரியர் தின விழாக்கள் யாதாக இருந்தாலும் பழைய மாணவர் சங்கத்தின் ஒத்துழைப்பு எமக்கு நல்ல திருப்தி தருவதாக உள்ளது. பழைய மாணவர் சங்கத்தின் உயிரோட்டமான செயற்பாடுகளின் முன்மாதிரியாக மாதாந்தக் கூட்டங்கள் கிரமமாக நடைபெற்று பாடசாலையின் அபிவிருத்திபற்றிய விடயங்களும் தேவைகளும் கேட்டறியப் படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வருடத்திற்கான காவலாளிக் கொடுப் பனவுகள் பழைய மாணவர் சங்க அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் பொறுப் பெடுப்பது என்ற தீர்மானம் பாடசாலைக்கும் – பழைய மாணவர்களுக்கும் உள்ள உறவை மேலும் வலுவடையச் செய்கி ன்றது. இது வரவேற்கக் கூடியதுடன் பாராட்டப்பட வேண்டி ஒன்றாகும்.

பழைய மாணவர்கள் மட்டுமல்லாது எமது ஆசிரியர் குழாமும் எமது பாடசாலை தேவை அறிந்து ஒவ்வொரு நிகழ்வுக்கும் நிதியுதவி செய்துவருகின்றனர்.

ஆசிரியர்.செல்வி.மாலதி.சிவராஜா எமது பாடசாலையின் முகப்பு வளைவினை ரூபா 15,000.00 செலவில் அமைத்து தந்த மையை இந்நேரத்தில் நினைவுகூறி நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் திருமதி.சி.நந்தகுமார் அவர் களின் உறவினர் டென்மார்க்கை சேர்ந்த நலன்விரும்பி திரு.மோகனகுமார் அவர்கள் வருடா வருடம் எமது பாடசாலைக்கு நிதியுதவி நல்கிவருவது குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் இவ்வருடம் அதிபர், உபஅதிபர் அலுவலகங்களுக்கு தேவை யான ரூபா 25,000.00 பெறுமதியான மேசை விரிப்புக்கள் திரைச்சீலைகள் ஆகியவற்றை கொள்வனவு செய்து வழங்கியிருந்தார். அவருக்கும் இந்நேரத்தில் பாடசாலையின் சமூகம் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

## முகாமைத்துவக் கட்டமைப்பு

| | |
|---|---|
| திரு.கு.திலீபன் | :- அதிபர் |
| திருமதி.சி.நந்தகுமார் | :- பிரதிஅதிபர் |
| திரு.செ.ஜெயகாந்தன் | :- பகுதித் தலைவர் (ஆரம்பப்பிரிவு) |
| திருமதி.க.ஜெகதீஸ்வரன் | :- பகுதித் தலைவர் (6 - 9) |
| திருமதி.தி.கணேசமூர்த்தி | :- பகுதித்தலைவர் (10 - 11) |

## ஒழுகாற்றுக் குழு

பொறுப்பாசிரியர்கள்

| | |
|---|---|
| திருமதி.சி.நந்தகுமார் | :- பிரதி அதிபர் |
| திரு.நா.தவேந்திரராசா | :- ஆசிரியர் |
| திரு.ஞா.காண்டீபன் | :- ஆசிரியர் |
| திருமதி.தி.கணேசமூர்த்தி | :- ஆசிரியர் |
| செல்வி.S.மரியஅஞ்சலா | :- ஆசிரியர் |

பாடசாலையின் ஒழுக்க விழுமியங்கள், கலாச்சார நிகழ்வுகள், மற்றும் பௌதீக வளப்பொருட்களை பேணி பராமரித்தல் போன்ற செயற்பாடுகளுக்கு அதிபர், ஆசிரியர்களுக்கு அடுத்தபடியாக இருப்ப வர்கள் மாணவத்தலைவர்களாவர் அந்த வகையில் 2013ம் ஆண்டுக்கான பதினைந்து மாணவத் தலைவர்களை அதிபர், உபஅதிபர் மற்றும் ஒழுக்காற்றுக்குழு ஆசிரியர்கள் இணைந்து தெரிவு செய்து அவர்களுக்கான பொறுப்புக்கள் பகிர்ந்தளி க்கப்பட்டு 21.02.2013 அன்று வெளிநாட்டில் வதியும் பழைய மாணவன் நேதாஜி என்பவரால் சின்னம் சூட்டி கௌரவிக் கப்பட்டனர். மாணவத் தலைவர்கள் மத்தியில் மற்றவர்களுக்கு மதிப்பளித்தல், அதிபர், ஆசிரியருக்கு கீழ்படிதல், மற்றைய மாணவர்களை அனுசரித்தல், பாடசாலை செயற்பாடுகளை முன்னெடுத்தல், தலைமை தாங்கும் பண்பை வளர்த்தல். போன்ற செயற்பாடுகள் காணக்கூடியதாக இருப்பது வரவேற்கத்தக்கது. பகிர்ந்தளிக்கப்பட்ட பொறுப்புக்கள் ஒவ்வொரு மாதமும் நடாத்தப்படும் ஒழுக்காற்றுகுழு கூட்டத்தில் மாணவத்தலைவர்கள் செவ்வனே செய் திருக்கின்றார்களா? செயற்பாட்டில் காணப் படும் திருப்தி அல்லது திருப்தி யின்மை சுட்டிக்காட்டப்படுவதுடன் அன் றைய தினம் மாணவத்தலைவர்களுக்கான பொறுப்புக்கள் மீண்டும் பகிர்ந்தளிக்கப்படும் இவ்வாறு ஒவ்வொரு மாதமும் பொறுப்பு க்கள் பகிர்ந்தளிக்கப்படுவதனூடாக ஒவ்வொரு மாணவத் தலைவருக்கும் சகல வேலைப் பொறுப்புக்களும் தெரிந்திருப்பதன் அவசி யம் பேணப்படுவது வரவேற் கத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளக மேற்பார்வைக் குழு

திரு.கு.திலீபன் :- அதிபர்

திருமதி.சி.நந்தகுமார் :- பிரதி அதிபர்

திரு.செ.ஜெயகாந்தன் :- ஆசிரியர்

திருமதி.தி.கணேசமூர்த்தி:-ஆசிரியர்

திருமதி.க.ஜெகதீஸ்வரன்:-ஆசிரியர்

## மதிய உணவுக் குழு

திரு.ஞா.காண்டீபன் :- ஆசிரியர்

திரு.க.கலியுகன் :- ஆசிரியர்

திருமதி.N.கருணாகரன்:- ஆசிரியர்

திரு.லோ.விஜேந்திரன் :- ஆசிரியர்

## பாடசாலை அபிவிருத்திக் குழு

தலைவர்

திரு.கு.திலீபன் (அதிபர்)
திருமதி.சி.நந்தகுமார்(உபஅதிபர்)

ஆசிரியர்கள்

திரு.செ.ஜெயகாந்தன்
திருமதி.தி.கணேசமூர்த்தி
திருமதி.க.ஜெகதீஸ்வரன்

பெற்றோர்

கே.சுமதி
சி.சாமினி
இயோகராணி

பழைய மாணவர்

திருமதி.A.பி.விக்ரோரியா
திரு.குறதீபன்

இக்குழு 2011ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவ கூடி பாடசாலை மாணவர்களின் கற்றல் வளர்ச்சி, பாடசாலையின் பௌதிகவள அபிவிருத்தி போன்ற செயற்பாடுகள் அலசி ஆராயப்பட்டு வருகின்றது. இக்குழுவிற்கென தனித்துவமான கணக்கும் காணப்படுகின்றது.

இக்குழுவின் துரித செயற்பாடுகளின் காரணமாக பாடசாலையின் பௌதீக வளங்களில் பாரியமாற்றம் ஏற்பட்டுள்ளது. அலுவலகம் 5 S முறையில் நவீனமுறைப் படுத்தப்பட்டது. இதுமட்டும் அல்லாது மரக்கறி தோட்டங்கள் அமைக்கப்பட்டதுடன் இனி வருங்காலங்களில் மாணவர்களின் மதிய உணவிற்குத் தேவையான மரக்கறிகளை இதிலிருந்தே பெற்றுக்கொள்வது என தீர்மானிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

பாடசாலையின் பௌதிக நிலைகளில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் காரணமாக சிறந்த கவின் நிலை சூழல் வளர்ச்சி பெற்று வருவது சிறப்பான எதிர்காலத்தை சுட்டி நிற்கின்றது. இணைபாட விதான செயற்பாடுகளை நோக்கும் போது மிகப்பாரிய முன்னேற்றம் குறுகிய காலப்பகுதியில் ஏற்பட்டுள்ளது. இக்குழுவின் முயற்சி காரணமாக குறுகிய காலத்தில் பாடசாலை மாணவர்களுக்கு பேரிகைப் பயிற்சி அளிக்கப்பட்டு இவ்வருடம் நடைபெற்ற இல்லமெய் வல்லுநர் போட்டியில் அணிவகுப்பு செய்து விருந்தினரை வரவேற்று அழைத்துச் சென்று மரியாதை செலுத்தியது பாடசாலை வரலாற்றின் மைல்கல் ஆகும். இது மட்டுமல்லாது கோட்ட மட்ட, வலய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் எமது மாணவர்களுக்கு வழங்கப்பட்ட சிறப்பான பயிற்சிகள் காரணமாக அதிக இடங்களைப் பெற முடிந்தது. இனி வரும் காலங்களிலும் மாணவர்களுக்கு சிறந்த விளையாட்டு வல்லுநர்கள் மூலம் பயிற்சி வழங்கு வதற்குத் திட்டமிட்டுள்ளோம். குறிப்பாக இலங்கை கூடைப்பந்து அணித்தலைவி எமது மாணவர்களுக்கான குறுகிய நேரப் பயிற்சியை வழங்க தீர்மானித்துள்ளார்.

E.K.S.P, S.D.M.G செயற்றிட்டம் மூலம் வகுப்பறை கவின் நிலைச் செயற்றிட்டங்கள், திருத்தங்கள் என்பன மேற்கொள்ளப்பட்டது. மேலும் இவ்வருடம் அபிவிருத்திக் குழு மூலம் பாடசாலையில் தரம் - 1 மாணவர்களின் அனுமதி அதிகரித்துக் காணப்படுவதுடன் ஏனைய தரங்களிலும் மாணவர்களின் அனுமதிகள் அதிகரித்துச் செல்வது கண்கூடு.

இவ்வாறாக எமது அபிவிருத்திக் குழு மூலம் பாடசாலையின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள், பௌதிக வளத் தேவைகள் முன்னெடுத்துச் செல்லும் அதேவேளை, இனித் தொடர்ந்து வருங்காலங்களிலும் பாடசாலையில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தும் வகையில் பல்வேறு திட்டங்களும் முன்மொழிவுகளும் மேற்கொள்ளப்பட்டு வருவது சிறந்த எதிர்காலத்தை ஏற்படுத்தும் எனநம்புகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

*தலைவர்* :- *திரு.கு.திலீபன்*

*செயலாளர்* :- *சா.சுலோசனா தேவி*

*பொருளாளர்* :- *திரு.சி.மகேந்திரராஜா*

*உறுப்பினர்கள்* :- *ஞா.காண்டீபன்*

*சி.மாலதி*

*ஸ்ரீ.விஜயலக்சுமி*

*பி.தங்கராணி*

*கு.யோகராணி*

*கே.சுமதி*

*சி.ராஜி*

*சி.நர்மதா*

## பாடசாலை பழைய மாணவர் சங்கம்

*தலைவர்* :- *திரு.கு.திலீபன் (அதிபர்)*

*உபதலைவர்*:- *திரு.க.ஜெயச்சந்திரன்*

*செயலாளர்* :- *திரு.கு.ரஜீவன்*

*உபசெயலாளர்*:- *திரு.இ.றொசான்*

*பொருளாளர்*:- *திருமதி.ச.ரவீந்திரன்*

*ஆசிரிய பிரதிநிதி* :- *திருமதி.சி.நந்தகுமார்*

:- *திரு.ஞா.காண்டீபன்*

*பிரதிநிதிகள்* :-

1. *எ.பி.விக்டோரியா*
2. *ஆ.தயாகரன்*
3. *இ.தனலோஜன்*
4. *கி.ராஜ்கரன்*
5. *சி.நளினி*
6. *க.தயாநிதி*
7. *எஸ்.அருனேஸ்வரன்*
8. *அ.பஞ்சலோகரஞ்சன்*
9. *ப.சயந்தினி*
10. *இ.சகானா*
11. *இ.துசல்யன்*
12. *து.றெக்ஸ்மன்*
13. *அ.உ.தயகுமாரி*
14. *S.விஜயகுமார்*
15. *க.சர்மிளா*

*எமது பாடசாலையின் பழைய மாணவர் களின் பங்களிப்பு பாடசாலையின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கின்றது. இலங்கையில் மட்டுமல் லாது புலம்பெயர் நாடுகளிலும் எமது பழைய மாணவர்களின் ஒத்துழைப்பு குறிப்பிடக்கூடிய விதத்தில் காணப்படு கின்றது.*

*இங்கிலாந்தில் வாழும் புலம்பெயர் பழைய மாணவ நண்பர்கள் இணைந்து கடந்த வருடம் சங்கம் ஒன்றை அமைத்து அதன் மூலம் எமக்கு பிரதி எடுக்கும் இயந்திரம், பேரிகை வாத்தியக் கருவி களை அன்பளிப்பு செய்தது குறிப்பிடத் தக்கது.*

*பாடசாலையின் அரங்கமேடையை நவீன முறையில் அமைக்கவேண்டிய தேவை ஏற்பட்ட போது ரூபா 1000,000.00 செலவில் அமரர்.கந்தர்.ஐயாத்துரை ஞாபகார்த்தமாக அவரது மகன் திரு.ஐ.தில்லைதேசிகன் தலைமையில் பிள்ளைகள் அமைக்க (பழையமாணவர்) முன்வந்தமை வரவேற்கக் கூடிய விடயமாகும்.*

*பழையமாணவர் தாய் சங்கத்தின் மூலம் இரவுக்காவலாளி கொடுப்பனவு, பாடசாலை நிகழ்வுகளுக்கான நிதி போன்ற ஒத்துழைப் புகளுக்கு உதவிய அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.*

*கனடா, ஜேர்மனி போன்ற நாடுகளிலும் புலம்பெயர் பழைய மாணவர்கள் சங்கங் களை உருவாக்குவதற்கு முதற்கட்ட வேலைகளை ஆரம்பித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.*

*பழைய மாணவர்களின் விழிப்புணர்வு பாடசாலையின் அயற் சமூகத்தொடர்பை மேலும் வலுவடையச்செய்கின்றது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/உயரப்புலம் மெதடிஸ் மிசன் தமிழ்க் கலவன் வித்தியாலயம்

## ஆசிரியர் குழாம்

| இல | நிரந்தர ஆசிரியர் | பாடம்/பொறுப்புகள் |
|---|---|---|
| 1) | திரு.கு.திலீபன் | அதிபர் |
| 2) | திருமதி.சி.நந்தகுமார் | பிரதி அதிபர் |
| 3) | திரு.இ.தர்மரட்ணம் | உடற்கல்வி |
| 4) | திருமதி.தி.கணேசமூர்த்தி | விஞ்ஞானம் |
| 5) | திருமதி.ந.தங்கராசா | சைவசமயம் |
| 6) | திருமதி.க.ஜெகதீஸ்வரன் | மனைப் பொருளியல் |
| 7) | செல்வி.சி.மாலதி | ஆரம்பக்கல்வி |
| 8) | திரு.செ.ஜெயகாந்தன் | ஆரம்பக்கல்வி |
| 9) | செல்வி.சூ.மரிய அஞ்சலா | ஆரம்பக்கல்வி |
| 10) | திரு.நா.தவேந்திரராசா | கணிதம் |
| 11) | திருமதி.மே.சாள்ஸ் | தமிழ் |
| 12) | திரு.சி.மகேந்திரராஜா | ஆரம்பக்கல்வி |
| 13) | திரு.ஞா.காண்டீபன் | ஆங்கிலம் |
| 14) | திருமதி.ம.குகன் | புவியியல் |
| 15) | திருமதி.நி.கருணாகரன் | சங்கீதம் |
| 16) | திரு.லோ.விஜேந்திரன் | விஞ்ஞானம் |
| 17) | திரு.க.கலியுகன் | நூலக ஆசிரியர் |
| 18) | திருமதி.உ.ஜெனித்தா | ஆரம்பக்கல்வி |
| | பகுதி நேர ஆசிரியர்கள் | |
| 1. | திரு.P.ஸ்ரீபாலன் | விவசாயம் |
| 2. | திரு.ச.சிவலிங்கம் | கணினி |
| 3. | திருமதி.வ.கஜேந்திரன் | நடனம் |
| | துணை ஆளணியினர் | |
| 1. | செல்வி.தெ.யசிந்தா | கணினிபோதனாசிரியர் |
| 2. | திரு.வே.தளையசிங்கம் | இரவுக் காவலாளி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்
*திருமதி.சு.தவநாயகம் :- வழிகாட்டலும் ஆலோசனையும்*

## மன்றங்களும் மன்றச் செயற்பாடுகளும்

### தமிழ் மன்றம்

பொறுப்பாசிரியர்கள்

*திருமதி.மே.சாள்ஸ்*

*தலைவர் :- செல்வன்.பி.ஜெனிஸ்ரன்*
*செயலாளர் :- செல்வி.க.சரணியா*
*பொருளாளர் :- செல்வன்.ச.வசீகரன்*

*எமது பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களின் ஓர் மாற்றத்தை ஏற்படுத்தும் மன்றமமாகவே தமிழ் மன்றம் திகழ்கின்றது. மாதாந்தம் நடைபெறும் மன்ற நிகழ்வுகள் மூலமாக மாணவர்களின் அறிவுத் திறன் விருத்தியுடன் தலைமை ஏற்கும் பண்பு, முன்வரும் தன்மை, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, உளரீதியான மனமகிழ்ச்சி என்பன ஏற்படுகின்றன.*

*தமிழ்ப்பாடத்தை ஊக்குவிக்கும் விதத்தில் தவணைப் பரீட்சையில் கூடிய புள்ளிகள் எடுப்போருக்கு பரிசில்கள் வழங்கி மாணவர் களுக்கு ஊக்கம் அளிக்கப்படுகிறது. அத்துடன் வாசிப்புத்திறனை விருத்தி செய்யும் முகமாக காலைநேரப் பிரார்த்த னையின் பின் பத்திரிகை வாசிப்பு என்பவற்றுடன் திருக்குறள் விளக்கம் ஆகிய செயற்பாடுகளும் நடைபெறுகின்றது குறிப்பிடத்தக்கது. பாடசாலை நேரத்திற்கு புறம்பான நேரங்களில் தினந்தோறும் எழுத்து, வாசிப்பினை மேம்படுத்தும் செயற்த்திட்டம் நடாத்தப்பட்டு வருகின்றது. மாணவர் களின் மகிழ்ச்சிகரமான கற்றல் செயற்பாடு களுக்கு தமிழ் மன்றமானது பேருதவியாக அமைந்து வருகின்றது என்பது மிகவும் மகிழ்ச்சிக்குரிய ஓர் விடயமாகும்.*

### ஆங்கில மன்றம் (English Forum)

பொறுப்பாசிரியர்கள்

*திரு.ஞா.காண்டீபன்*

*தலைவர் :- செல்வி.சொ.பகிதா*
*செயலாளர் :- செல்வி.பொ.சுகந்தா*
*பொருளாளர் :- செல்வி.உ.சரோஜினி*

*ஆங்கில மன்றமானது இன்றைய நவீன உலகில் மாணவர்களுக்கு மிகவும் முக்கியமானதொன்றாக அமைகிறது. ஆங்கிலம் ஒரு தொடர்பாடல் மொழியா கவும், காணப்படுகிறது. இதன் செயற் பாடாக ஒவ்வொரு மாதமும் ஆங்கில மன்றம் அதன் தலைவர் அவர்களால் நடாத்தப்படுகிறது. இதன் மூலம் மாணவர் களது ஆங்கில எழுத்துத்திறன், பேச்சுத் திறன், வாசிப்புத்திறன் வளர்க்கப்படுகிறது.*

*ஒவ்வொரு செவ்வாய், வியாழக் கிழமைகளில் காலை பிரார்தனையில் ஆங்கிலச் சொற்கள் மாணவர்கள் மூலம் கூறப்படுகிறது. அது மட்டுமல்ல, ஆங்கில தின போட்டிகளில் மாணவர்கள் பங்குபற்றி கோட்ட மட்ட போட்டிக்கு மாணவர்கள் செல்வதற்கு உறுதுணையாக இருக்கிறது. இச் செயற்பாடுகள் மூலம் மாணவர்களது விருத்தி, அடைவு மட்டம் உயர்த்தப் படுவதன் ஊடாக எதிர்காலத்தில் மாணவர் கள் ஆங்கில சொற்பதங்களுடன் கூடிய வசன அமைப்புகளை உருவாக்குவதில் இடர்பாடுகளை இழிவாக்கமுடியும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து மன்றம்

**பொறுப்பாசிரியர்கள்**

திருமதி.ந.தங்கராசா

**தலைவர்** :- செல்வன்.ப.சுதர்சன்

**செயலாளர்** :- செல்வி.ஜெ.ஜெனார்த்தனி

**பொருளாளர்** :- செல்வன்.சொ.பகிதா

எமது இந்து மன்றம் சைவப் பாரம்பரியம் விழுமியங்களையும், பண்பாடுகளையும் தன்னகத்தே இணைத்துச் செயற்படு கின்றது. இந்துமன்றச் செயற்பாடு களாக காலையில் தேவார புராணம், காயத்திரி மந்திரம், நற் சிந்தனையும் வெள்ளிக் கிழமைகளில் சிவபுராணம் கூட்டுப் பிரார்த்தனை, நற்சிந்தனை, சூரிய நமஸ்காரம் என்பனவும் நவராத்திரி விழா, பூசை, என்பனவும் சிறப்பான முறையிலே இடம்பெறுகின்றன.

சமய அறிவை விருத்தியடையச் செய்யும் நோக்கில் மன்றக் கூட்டம் இடம் பெறுவதோடு நவராத்திரி விழாவின் போது கலைநிகழ்வுகள், சமயப் பேச்சு, நாடகம், சமய அறிவுப் போட்டிகள் என்பன இடம் பெறுகின்றது.

மேலும் பண்ணிசைப் போட்டி, மாலை கட்டுதல், தோரணம் பின்னுதல் என்பன பாடசாலை மட்டத்திலும், கோட்ட மட்டத் திலும் மாணவர்கள் பங்கு பற்றி பயன் அடைகின்றனர். மாணவர்களுக்கு யோகா சனப்பயிற்சிக்கான ஒழுங்குகள் மேற் கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்க தாகும்.

## கிறிஸ்தவ மன்றம்

பொறுப்பாசிரியர்கள்

செல்வி.மே.அஞ்சலா

**தலைவர்** :- செல்வன்.சி.இ.நிரோஜன்

**செயலாளர்** :- செல்வி.க.சரணியா

**பொருளாளர்** :- செல்வி.த.பிறிஸ்கா

யா/உயரப்புலம் மெ.மி.த.க வித்தியால யத்தின் கிறிஸ்தவ மாணவர்களின் கிறிஸ்தவ ஆராதனைகள் வெள்ளிக் கிழமைகள் தோறும் சிறப்பாக நடை பெறுகின்றன. 2012ற்கான கிறிஸ்தவ பிறப்பையொட்டிய "ஒளிவிழா" நிகழ்வுகள் யாவும் மிகவும் சிறப்பாக இடம்பெற்றன. தினந்தோறும் ஆராதனைகள் இடம் பெற்று வருகின்றன.

## விஞ்ஞான - கணித மன்றம்

**பொறுப்பாசிரியர்கள்**

திருமதி.தி.கணேசமூர்த்தி (விஞ்ஞானம்)

திரு.நா.தவேந்திரராசா (கணிதம்)

திரு.லோ.விஜேந்திரன் (விஞ்ஞானம்)

**தலைவர்** :- செல்வன்.சா.கிருசாந்

**செயலாளர்** :- செல்வி.சொ.பகிதா

**பொருளாளர்** :- செல்வி.க.சரணியா

விஞ்ஞான மன்றம் செயற்படுவதன் முக்கிய நோக்கம் மாணவர்கள் சூழலை நன்கு அவதானித்து உற்றுநோக்கி ஆராயும் பண்பை வளர்ப்பதுடன் சரியான முடிவெடுக்கும் பண்பையும் வளர்ப்பதாகும். மாணவர்கள் விஞ்ஞான – கணித தேர்ச்சி மட்டத்தை அடைவதற்கு கற்பித்தல் செயற்பாட்டுடன் மேலதிகமாக காலை, மாலை, விடுமுறைகால வகுப்புகள் எடுக்கப்படுகின்றன. வருடா வருடம் நவீன கற்பித்தல் துணைச்சாதனங்களைப் பயன் படுத்தியும் சிறந்த வளவாளர்களைக் கொண்டு வானியற் பாசறை நிகழ்வுகள் நன்கு திட்டமிடப்பட்டு செய்யப்படுவது கற்றலில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் என எண்ணுகின்றோம்.

மாதாந்தம் நடைபெறும் விஞ்ஞான – கணித மன்றச் செயற்பாடுகள் மூலம் மாணவர்களின் தேடிக்கற்கும் பண்பும் வளர்கின்றது. இதே வேளை இந்த வருடம் புத்தாக்குநர் கழகம் ஒன்று ஸ்தாபிக் கப்பட்டது. இக்கழகத்தின் நோக்கம் புத்தாக்கங்களை உருவாக்குவதாகும்.

விஞ்ஞான – கணித மன்ற செயற்பாட்டின் முக்கிய நிகழ்வாக மாணவர்களை கோட்டமட்ட, வலயமட்ட போட்டிகளில் பங்குபற்றச் செய்வதுடன் அதில் வெற்றிபெறச் செய்தலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுக் கழகம்

தலைவர் :- திரு.கு.திலீபன் (அதிபர்)

செயலாளர் :- திரு.இரா.தர்மரட்ணம்

திருமதி.சி.நந்தகுமார் - பிரதி அதிபர்

திருமதி.தி.கணேசமூர்த்தி - ஆசிரியர்

திரு.செ.ஜெயகாந்தன் - ஆசிரியர்

திரு.S.மகேந்திரராஜா - ஆசிரியர்

திருமதி.க.ஜெகதீஸ்வரன் - ஆசிரியர்

திரு.நா.தவேந்திரராசா - ஆசிரியர்

2013ம் ஆண்டிற்கான செயற்பாடுகள்

2013ம் ஆண்டிற்கான இல்ல மெய்வல்லுநர் போட்டியினை நடத்துவதற்கான ஆலோசனைக் கூட்டம் தலைவர் திரு.கு.திலீபன் தலைமையில் 02.01.2013 பாடசாலை ஆரம்பநாள் அன்று நடைபெற்றது. அன்றைய கூட்டத்தில் 29.01.2013ல் போட்டிகளை நடாத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் இல்லப் பொறுப்பாசிரியர்கள் ஏனைய ஆசிரியர்கள், மாணவர்கள் தெரிவு இடம்பெற்றது.

தொடர்ந்து மெய்வல்லுநர் போட்டிக்கான மாணவர்களை காலை, மாலை விடுமுறை நாட்களில் பயிற்சிகளை வழங்கியதுடன் இடைவேளைக்கான நிகழ்ச்சியும் அணிநடை பயிற்சியும் விசேடமாக பாண்டுவாத்தியம் திறம் பட பயிற்றுவித்து பாடசாலைச் சமூகத்தின் பாராட்டையும் இல்ல மெய்வல்லுனர் போட்டி நடைபெற்ற 29.01.2013 அன்று பெற்றுக் கொண்டது பெருமை தரும் விடயமாகும்.

தொடர்ந்தும் சோர்ந்து விடாது பெரு விளையாட்டுக்களில் ஒன்றாகிய வலைப் பந்துப் போட்டிக்கான பயிற்சிகள் அளிக்கப்பட்டு 17 வயது பெண்கள் பிரிவு நல்லூர் கோட்ட மட்டத்தில் பிரபல கல்லூரிகளுடன் மோதி மூன்றாம் இடத்தினை எமதாக்கிக் கொண்டது. மகிழ்ச்சி தரும் விடயமாகும்.

முதன் முறையாக மென்பந்து (கிறிகற்) போட்டியில் எமது மாணவர்கள் உற்சாகமாக பங்குபற்றி எதிர்காலத்தில் நாம் சாதனை படைப்போம். என்கின்ற மன வைராக்கியத்தில் பயிற்சிகளில் ஈடுபட்டு வருவது கண்டு பாடசாலை பெருமிதம் அடைகின்றது.

2013ம் ஆண்டுக்கான கோட்ட மட்ட மெய்வல்லுநர் விளையாட்டு போட்டிகளில் எமது மாணவர்கள் பங்குபற்றி வகை இரண்டு பாடசாலைகளில் முதலாம் இடத்தை தமதாக்கிக் கொண்டது பாடசாலைச் சமூகத்தினராகிய எமக்கு மிகவும் மகிழ்ச்சி தரும் விடயமாகும்.

நல்லூர் கோட்ட மட்டத்தில் எமது மாணவர்கள் படைத்த சாதனைகள் பின்வருமாறு

செல்வி.ஜெ.ஜெனார்த்தனி 19 வயதுப் பிரிவு

400m முதலாம் இடம்
800m முதலாம் இடம்
1500m முதலாம் இடம்

செல்வி.கு.றிரோசா 17 வயதுப் பிரிவு

200m மூன்றாம் இடம்
400m முதலாம் இடம்
800m முதலாம் இடம்

செல்வி.கே.ரியானா 15 வயதுப் பிரிவு

400m முதலாம் இடம்

செல்வி.செ.சசிகலா 15 வயதுப் பரிவு

ஈட்டி எறிதல் - மூன்றாம் இடம்
குண்டு போடுதல் - இரண்டாம் இடம்

செல்வன்.க.ரதீபன் 13 வயதுப் பரிவு

நீளம் பாய்தல் - மூன்றாம் இடம்

செல்வன்.ந.ஜெனிஸ்ரன் 19 வயதுப் பரிவு

1500m மூன்றாம் இடம்

செல்வி.வி.பிறின்சிலா 19 வயதுப் பரிவு

ஈட்டி எறிதல் - மூன்றாம் இடம்

இந்த சாதனை மாணவர்களை பாடசாலைச் சமூகம் கௌரவித்து வாழ்த்துவதுடன் நின்று விடாது வலயம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகாணம், தேசிய மட்டப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெற தினமும் பயிற்சிகளில் ஈடுபடுத்தி வருகின்றோம். அவர்கள் வெற்றி பெறுவார்கள் என்றும் திடமான நம்பிக்கை எமக்குள்ளது.

எமது நோக்கம் விளையாட்டில் மாணவர்கள் வெற்றிபெறுவது மட்டுமல்லாது சிறந்த தலைமைத்துவப் பண்புகளை வளர்த்துக் கொண்டு சமூகத்திற்கு ஏற்புடைய மாணவ சமூகத்தை உருவாக்குவதே ஆகும்.

## தகவல் தொடர்பாடல் கழகம்

**பொறுப்பாசிரியர்கள்**

திரு.ச.சிவலிங்கம்

திரு.ஞா.காண்டீபன்

தலைவர் :- செல்வி.சொ.பகிதா
செயலாளர் :- செல்வி.உ.ஈழப்பிரியா
பொருளாளர் :- செல்வி.பொ.சுகந்தா

இன்றைய தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பத்தின் அசுரவளர்ச்சி காரணமாக எமது பாடசாலை மாணவர்களையும் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பத்தினுள் உள்ளீர்க்கும் தேவை உள்ளது. அதற்காக 10 கணனிகள்கொண்ட கணினி ஆய்வு கூடம் உருவாக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் தமது பாடநேரத்திலும், ஓய்வுநேரத்திலும் கணினி ஆய்வுகூடத்தைப் பயன்படுத்தி தமது கணனி அறிவை வளர்த்துக் கொள்கின்றனர்.

பாடசாலை தகவல் தொடர்பாடல் கழகம் மாதத்திற்கு ஒரு தடவை கூடுகின்றது. இங்கு மாணவர்களின் கணினி அறிவை மேம்படுத்துவதற்காக செயற்பாடுகள் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன.

இக் கணினி ஆய்வுகூடம் ஆரம்பிக்கப் பட்டதன் பயனாக எமது மாணவர்களும் மாகாண கல்வித் திணைக்களம் நடத்தும் கணினி மென் பொருள் ஆக்கப் போட்டியில் பங்கேற்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதில் பங்குபற்றி பரிசில்கள், சான்றிதழ்கள் பெற வாழ்த்துகின்றேன்.

மாலை நேரத்தில் யாழ் வலய முறைசாராக் கல்விப் பிரிவின் அனுசரணையுடன் கணினி பயிற்சி நெறி ஆரம்பிக்கப்பட்டு முறையாக நடைபெற்று வருகின்றன. இதற்காக நியமிக்கப்பட்ட கணினி போதனாசிரியை செல்வி.தெ. யசிந்தா இப் பயிற்சி நெறியை திறன் பட நடாத்தி வருகின்றார். இதன் மூலம் எமது பாடசாலை பழைய மாணவர்கள் பயன் பெற்று வருகின்றனர்.

யாழ் கல்வித் திணைக்களத்தின் ஊடாக பல்லூடக எறியி (Multi media) ஒன்றும் கிடைக்கப் பெற்றுள்ளது. இதன் உதவியுடன் வானியல் பாசறை மாணவர்களுக்கான கருத்தரங்குகள் ஆசிரியர்களுக்கான பயிற்சி கருத்தரங்குகள் நடாத்தப்பட்டு வருகின்றன. இவற்றின் மூலம் எமது மாணவர்களின் கற்றல் தேர்ச்சிமட்டம் உயர்வடைய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

எமது பாடசாலையின் இணையத்தளமுகவரி
**web address –www.juv.sch.lk**
எமது பாடசாலையின் இலத்திரனியல் முகவர்
**www.uyarapulammmtms@yahoo.com**

எமது பாடசாலைக்குரிய இணையத்தள உதவியுடன் எமது பாடசாலை பற்றிய தகவல்களை உலகளாவிய ரீதியில் அறியவும் வெளிநாடுகளில் வதியும் புலம்பெயர் பழைய மாணவர்களுக்கிடையே பாடசாலை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் முடியும் என நம்புகின்றோம்.

## சுகாதார மன்றம்

**பொறுப்பாசிரியர்**

திரு.லோ.விஜேந்திரன்

**தலைவர்** :- செல்வி.கு.குணதர்சிகா
**செயலாளர்** :- செல்வன்.மு.தரிசன்
**பொருளாளர்** :- செல்வன்.யோ.தர்சன்

எமது பாடசாலை சுகாதார மன்றத்தினூடாக பாடசாலைச் சுற்றுப்புற சுத்தத்தினைப் பேணுதல் மாதம் ஒருமுறை சிரமதானப்பணியை மேற்கொள்ளுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலசல கூட சுத்தத்தினைப் பேணுதல். மாணவர் சுயசுத்தம், தினந்தோறும் காலை உடற்பயிற்சியில் மாணவர்களை ஈடுபடுத்தல் மாணவர் மத்தியில் சுகாதாரப் பழக்கவழக்கம் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தல் சுகாதார சீர்கேட்டினால் ஏற்படும் தீமை பற்றியசெய்திகள், விளம்பரங்கள், சுவரொட்டிகளை ஒட்டி காட்சிப்படுத்தி அறிவுரை வழங்குதல். உடற்பயிற்சியின் ஊடாக விளையாட்டின் நுட்பங்களையும் விருத்தியடையச் செய்து பாடசாலை கோட்டம்,வலயம்,மாவட்ட மாகாண மட்ட போட்டிகளை பங்குபற்ற ஊக்கமளிப்பதுடன் உடல் உள சமூக சுகாதாரமிக்கவர்களாக மாணவர்களை உருவாக்குதல் சுகாதார மன்றத்தின் நோக்கமாகும்.
மாணவர்களுக்கு முதலுதவி பயிற்சியை வழங்கும் நோக்குடன் இலங்கை செஞ் சிலுவை சங்க உறுப்பினர்களின் உதவியுடன் முதலுதவி பாசறை மூலம் பயிற்ச்சிகள் வழங்கப்பட்டது ஒரு முக்கியமான விடயமாகும்.

## கவின் கலை மன்றம்

**பொறுப்பாசிரியர்கள்**

திருமதி.சி.நந்தகுமார்
திருமதி.நி.கருணாகரன்
திருமதி.வ.கஜேந்திரன்

**தலைவர்** :- செல்வி.உ.சரோஜினி
**செயலாளர்** :- செல்வன்.மு.தர்சன்
**பொருளாளர்** :- செல்வி.ஜென்சிகா

கவின்கலை மன்றத்தின் மூலம் மாணவர்களிடையே காணப்படுகின்ற பாடல் திறமை மற்றும் நடனத்திறமை, வரையும் திறமை, போன்றவை இனங்காணப்பட்டு மாணவர்களின் கலை மற்றும் கலாச்சாரப் பண்புகளை வளர்க்கப்பட்டு வருவது வரவேற்கப்படும் சிறப்பம்சம் ஆகும். மாணவர்களின் கலை ஆர்வத்தை தூண்டுவதற்காக தமிழ் மன்றத்தின் மூலமாகவும் கலை நிகழ்வுகள் நடாத்தப்படுவது மற்றுமொரு சிறப்பம்சம் ஆகும். கவின் மன்றதின் மூலம் மாணவர்களுடைய கலை உணர்வுகள் இனங்காணப்பட்டு நன்கு பயிற்றுவித்ததன் மூலம் செல்வி.ஜெமீமா அவர்கள் கோட்ட மட்டத்தில் மூன்றாம் இடத்தைப் பெற்று எமது பாடசாலையின் இருப்பை மேலும் ஒருபடி உயர்த்தியது என்றால் மிகையாகாது.

மேலும் இம் மன்றத்தின் செயற்பாடுகள் மேலும் விரிவடைந்து எதிர் வரும் ஆண்டுகளில் எமது மாணவர்களின் கலை ஆர்வத்தை தூண்டும் என்பதில் ஐயமில்லை கலை நிகழ்வுப் போட்டிகளில் மாணவர்கள் பங்குபற்றி வெற்றி பெற மனதார வாழ்த்துகின்றோம்.

## சகபாடி மத்தியஸ்தம் சபை

**பொறுப்பாசிரியர்**

திருமதி.உ.ஜெனித்தா
செல்வி.சூ.மரியஅஞ்சலா

**தலைவர்** :- செல்வி.சொ.பகிதா
**செயலாளர்** :- செல்வன்.ந.சுதர்சன்
**பொருளாளர்** :- செல்வி.சி.கௌதமி

யா/உயரப்புலம்மெ.மி.த.க பாடசாலையில் சகபாடி மத்தியஸ்த சபை சென்ற வருடம் ஆரம்பிக்கப்பட்டதுடன் அது தொடர்பாக இடஒதுக்கீடு, தளபாடவசதிகள், பிரேணைப் பெட்டி, சீருடை, சின்னம், போன்றவை தொடர்பாக அதிபர், ஆசிரியர்களுடன் கலந்துரையாடப்பட்டது.

இச் சபையின் முக்கிய நோக்கம் மாணவரிடையே ஏற்படும் பிரச்சனைகளை தாமாகவே முன்வந்து சக மாணவருக்கு கூறுவதன் மூலம் மாணவர் தமது பிரச்சனைகளை தாமே தீர்த்துக்கொள்ள முயல்வர். முடிவெடுக்கும் திறனை வளர்த்துக் கொள்ள முயல்வர்.

மாணவர்கள் வகுப்பு ரீதியாக தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு வெள்ளிக் கிழமைகளில் சீருடை வழங்கப்பட்டு அதனை அணிந்து தமது செயற்பாட்டை மகிழ்ச்சியுடன் ஆற்றுவதற்குரிய மன நிலையை பெற்றுக்கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனர்த்த முகாமைத்துவ குழு

தலைவர் - அதிபர்

**பொறுப்பாசிரியர்கள்**

*திருமதி.க.ஜெகதீஸ்வரன்*

*திரு.க.கலியுகன்*

*திருமதி.ம.குகன்*

***தலைவர்*** *:- செல்வன்.ந.ஜெனிஸ்ரன்*

***செயலாளர்*** *:- செல்வி.சொ.பகிதா*

***பொருளாளர்*** *:- செல்வன்.ச.வசிகரன்*

*பாடசாலை மட்டத்தில் ஏற்படும் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான விழிப் புணர்வை மாணவர் மத்தியில் ஏற்படுத்தும் நோக்கில் இக் குழச் செயற்பாடுகள் கிரமமான முறையில் நடைபெற்று வருவகின்றது இக் குழுவின் மூலம் அனர்த்த முகாமைத்துவ நாள் ஆண்டுதோறும் அனுட்டிக்கப்படும். அந்நாளில் விழிப்புணர்வு கருத்தரங்குகள் மாணவர்களிடையே அனர்த்தப் பாதுகாப்புக் கல்வி தொடர்பான வினா விடைப் போட்டிகள் இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது. இக்குழுவின் மூலம் பாடசாலைச் சுற்றுப் புறச்சூழல் தொடர்பான விடயங்கள், அனர்த்தப் பகுதிகளை இனங்காட்டல், அனர்த்த முகாமைத்துவ சார் வரைபட விளக்கம் என்பன செயலமர்வுகள் மூலம் மேற்கொள்ளப் பட்டது. மேலும் இது சம்பந்தமாக பாடசாலை மட்டத்தில் பெற்றோர் விழிப்புணர்வுச் செயலமர்வுகள், மாணவர் விழிப்புணர்வுச் செயலமர்வுகள் என்பன மேற்கொள்ளப்பட்டது. நாளாந்த காலை ஆராதனையின் போது பொறுப்பா சிரியர்களினால் அனர்த்த முகாமைத்துவம் அதன் படி மாணவர்கள் ஒழுகுவதும் தொடர்பான செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றது. எனவே இக்குழுவின் செயற்பாடுகளினால் மாணவர்கள் பாடசா லையில் அனர்த்தப் பாதுகாப்பிற்குட்படு கின்றனர்.*

## சமூக விஞ்ஞான மன்றம்

**பொறுப்பாசிரியர்கள்**

*திருமதி.ம.குகன்*

*திரு.க.கலியுகன்*

***தலைவர்*** *:- செல்வி.உ.சரோஜினி*

***செயலாளர்*** *:- செல்வன்.சா.கிருசாந்*

***பொருளாளர்*** *:- செல்வி.பா.கிருசாளினி*

*எமது பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களின் சமூக விஞ்ஞான அறிவி னை உயர்த்தும் வகையிலும் அதன் மூலம் மாணவரது அடைவு மட்டத்தினை மேம்படுத்தும் வகையிலும் மாதாந்தம் சமூக விஞ்ஞான மன்றச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அந்த வகையில் சமூக விஞ்ஞான மன்றச் செயற்பாடுகளில் ஒவ்வொரு வெள்ளிக் கிழமைகளில் நடைபெறும் காலைப் பிரார்த்தனை முடிவிலும் பொதுஅறிவு விடயங்கள் மாணவர்களால் வாசிக்க ப்படுகின்றன. இது வினா விடை மூலம் நடத்தப்படுகின்றது. மாதாந்தம் பொது அறிவுப் போட்டிகள் நடத்தப்பட்டு கூடிய புள்ளிகள் பெறும் மாணவர்களை ஊக்குவிக்கும் முகமாக பரிசில்கள் வழங்கப்படுகின்றன. நூலகத்தில் பொது அறிவு விடயங்கள் விளம்பரப் பலகையில் மாதாந்தம் போடப்படுகின்றன. இவை மாணவர்களிற்கு பெரிதும் பயனுள்ளதாக வுள்ளது.*

*மேலும் ஒவ்வொரு காலைப் பிரார்த்த னையின் போதும் நாளாந்த பத்திரிகை வாசிக்கப்படுகின்றது. இதன் மூலம் பல்வேறு சமூக விஞ்ஞான விடயங்களைப் பெறுவதற்கான களம் அமைக்க ப்படுகின்றது. மேலும் இவ் மன்றச் செயற்பாட்டில் கடந்த 2012 ஆம் ஆண்டு கோட்ட மட்டத்தில் நடைபெற்ற போட்டியில் செல்வி.கு.டனுசியா தரம் – 6 மூன்றாம் இடத்தினைப் பெற்றுக் கொண்டமை இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும். எனவே இவ் சமூக விஞ்ஞான மன்றமானது மாணவர்களது அறிவு சார் விடயங்களை பெற்றுக் கொள்வதற்கும் மகிழ்ச்சிகரமான கற்றலுக்கும் வழிசமைக்கின்றது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டாயக் கல்விக்குழு

**பொறுப்பாசிரியர்**

*திருமதி.சு.தவநாயகம்*

*2012ம் ஆண்டு கட்டாயக் கல்விக் குழச் செயற்பாடுகள் சிறந்த முறையில் முன்னெடுக்கப்பட்டது. இரண்டு மாதங் களுக்கு ஒரு தடைவ கட்டாயக் கல்விக் குழுக் கூட்டம் நடைபெறுகின்றது. கூட்டத்தில் மாணவர்களது பாடசாலை வரவொழுங்கை சீராடுத்துவதற்கு ஏற்றதான தீர்மானங்கள் எடுக்கப்பட்டு நிறை வேற்றப்பட்டது. பாடசாலைக்கு 80% ற்கு குறைவான வரவை வெளிப்படுத்திய மாணவர்களது விபரம் திரட்டப்பட்டு அவர்களை தனிப்பட்ட ரீதியில் அணுகி அவர்களது பிரச்சினைகளை கண்டறிந்து அவர்கள் தொடர்ந்து பாடசாலைக்கு ஒழுங்காக வரவு ஒழுங்கு செய்தோம். தேவையானவர்களுக்கு தனிப்பட்ட உளவளத்துணையும் வழங்கப்பட்டது.*

*மேலும் இப்பாடசாலையில் கல்வி கற்கும் அனைத்து மாணவர்களது சுயவிபரமும் திரட்டப்பட்டு அவர்கள் வசிக்கும் பிரிவைச் சேர்ந்த கிராம உத்தியோகத்தர்களுக்கு வரவொழுங்கீனமான மாணவர்களது விபரங்கள் அனுப்பப்பட்டு, கிராம உத்தியோகத்தர்கள் மூலம் பெற்றோர்களை அணுகி மாணவர்கள் பாடசாலைக்கு ஒழுங்காக வரச் செய்வதற்கு முயற்ச்சி மேற்கொண்டோம். அத்துடன் வழிகாட்டலும் ஆலோசனைக்கு பொறுப்பான ஆசிரியர் மாணவர்களது வீட்டிற்கு நேரடியாக சென்று பெற்றோருடன் கலந்துரையாடி அவர்களது வரவினை சீர்செய்துள்ளார்*

*இதன் தொடர் முயற்ச்சியாக பெற்றோர் சந்திப்பு ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டது. இச் சந்திப்பின் போது எமது பிரதேசத்திற்குப் பொறுப்பான பொலிஸ் உத்தியோகத்தர், மாணவர்களது பிரிவு களைச் சேர்ந்த அனைத்து கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அலுவலர் கள், பிரதேச செயலகங்களைச் சேர்ந்த சிறுவர் பாதுகாப்பு உத்தியோ கத்தர்கள் அனைவரும் கலந்த கொண்டு பாடசாலை வரவொழுங்கு இது தொடர்பாக பெற்றோர்களது பங்களிப்பு இன்று நடைமுறையிலுள்ள சட்டங்கள், மாணவர் களது கல்வி போன்றவை தொடர் பாக அனைவரும் பெற்றோர்க்கு விழிப்புணர்வுக் கருத்துக்களை வழங்கினார்கள்.*

*இவ்வாறு தொடர்ந்து எடுக்கப்பட்ட முயற்ச்சியின் பயனாக 90% மாணவர்களது உள்ளத்தில் அன்பு, ஆதரவு, உணர் வையும், அகமகிழ்வையும் ஏற்படுத்தி யுள்ளமை விசேடமாக குறிப்பிடத்தக்கது. அதிகமான மாணவர்கள் எமது இச் செயற்பாடுகளால் தமது வரவை சீர்படுத்தி யுள்ளனர். வரவு சீர்படுவதனூடு மாணவர்களது ஒழுக்கம், கல்வி இரண்டி லும் அடைவை அதிகரிக்க முடியுமென திடமாக நம்புகின்றோம்.*

## பாடசாலைத் தேவைகள்

- *பாடசாலை மைதானம்*
- *விளையாட்டு உபகரணங்கள்*
- *பிரிக்கப்பட்ட வகுப்பறைகள்*
- *நூலக வசதி கட்டிடம்*
- *நூலக புத்தகங்கள், இறாக்கைகள்*
- *செயற்பாட்டறைகள்*
- *ரோனியோமிசின், தொலைக்காட்சி*
- *இணைய வசதிகள்*

## இதயம் கனிந்த நன்றி

*எமது பாடசாலையின் **தூரநோக்கிற்கு அமைய மாறிவரும் புதிய உலகத்தின் சவால்களை எதிர் கொள்ளும் வகையில் மாணவர்களின் உள்ளார்ந்த ஆற்றல்களை விருத்தி செய்து சமூக இயைபாக்க முடையவர்களாக வளர்த் தெடுத்து புதிய சமூதாயத்தை உருவாக்குதல்** என்ற வாசகத்திற்கு அமைவாக எமது மாணவரின் கல்விச் செயற்பாடுகளைப் படிப்படியாக முன்நகர்த்திச் செல்கின்றோம். இந்த நடைமுறைக்கால மாற்றத்திற்கு காரணமான அன்புள்ளம் கொண்ட நீங்கள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொருவரும் கொடுத்து வரும் பங்களிப்பும் ஒத்துழைப்புமே என்றால் மிகையாகாது.

இதன் வெளிப்பாடாக இன்றைய மகத்தான பரிசளிப்பு விழாவிற்கு முதன்மை விருந்தினராக வருகைதந்து மகிழ்வித்த எமது யாழ்ப்பாண கல்விப்பணிப்பாளர் திரு.செ.உதயகுமார் அவர்களுக்கும் அருட்கரங்களால் பரிசில்களை வழங்கு வதற்காக வருகை தந்திருக்கும் திருமதி. நந்தினி.உதயகுமார் அவர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சிறப்பு விருந்தினராக வருகைதந்திருக்கும் திரு.பொ.அருணகிரிநாதன் அவர்களுக்கும் பாடசாலை சமூகம் சார்பாக நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம். கௌரவ விருந்தினராகவும் கலந்து சிறப்பிக்கும் பழையமாணவி.திருமதி.பெ.அமுதா அவர்க ளுக்கும் அவர்தம் உறவினர்களுக்கும் பாடசாலையின் வளர்ச் சிக்கு உதவியும் ஒத்தாசையும் வழங்கிய பழைய மாணவ சங்கத் தினருக்கும், அபிவிருத்தி சங்கத்தினருக்கும் எமது பாடசாலையின் லண்டன் வாழ் புலம்பெயர்ந்த மாணவர்கள் தாங்கள் வாழும் இடத்தில் சங்கங்களை அண்மைக் காலத்தில் அமைத்து தாமாக முன்வந்து பெருவிருப்புடன் பாடசாலை க்கான தேவைகளை நிறைவேற்றி வருகின்றனர். அவர்கள் அனைவருக்கும் எமது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இதேவேளை எமது பாடசாலைக்கு தேவையறிந்து நிதியுதவி வழங்கும் ஆசிரியர்கள், ஆசிரிய உறவினர்கள், நலன்விரும்பிகள், புலம்பெயர் பழைய மாணவர்கள் இலங்கையில் வாழும் பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவசங்க உறுப்பினர்கள், எல்லா வற்றுக்கும் மேலாக எமது அன்புள்ளம் கொண்ட பெற்றோர்கள் யாவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் எமது அழைப்பை ஏற்று வருகை தந்த கோட்டக் கல்விப்பணிப்பாளர், உதவிக் கல்விப்பணிப்பாளர்கள், சேவைக் கால ஆசிரிய ஆலோசகர்கள் அயற் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், நலன்விரும்பிகள் யாவருக்கும் எமது நன்றிகள்.

அதிபர்

## பரிசில் தின நிகழ்விற்கு உதவியோர்.

அருட்.திரு.அன்ரனி.சவரிமுத்து – 2000
(தென்னிந்திய திருச்சபை)

அதிபர், ஆசிரிய
நலன்புரிக் கழகம் – 8000

திருமதி.பெ.அமுதா – 20,000
(புலம்பெயர் பழையமாணவி லண்டன்)

திரு.தே.நடனகுமார் – 5000
(நமசிவாயம் தேவசாகயாம்
ஞாபகார்த்தமாக - நலன்விரும்பி
அவுஸ்ரேலியா)

செல்வி.சி.மாலதி – 7,500.00
(திரு.திருமதி.சிவராசா ஞாபகார்த்தமாக)

திருமதி.க.நிரஞ்சனி – 1500

பழைய மாணவர்கள் – 10,000

திருமதி.ர.சத்தியானந்ததேவி
(அமரர்.கணபதிபிள்ளை.சின்னத்துரை
ஞாபகார்த்த நினைவுச்சின்னம் -
வெற்றிக்கிண்ணம்)

பெற்றோர்கள் அன்பளிப்பு – 25,000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசில் பெறும் மாணவர் விபரம் - 2012

## ஆரம்பக்கல்வி பரிசு பெறுபவர்கள்

**தரம் - 1**

I) *செல்வன்.தி.தனுசன்*
பாடங்கள் : தமிழ் , சமயம் , கணிதம், சுற்றாடல்

II) *செல்வி.சி.லாமதி*
பாடங்கள் : கிறிஸ்தவம்

**தரம் - 2**

I) *செல்வி.கி.நிதுஜா*
பாடங்கள் : தமிழ் , சமயம் , கணிதம், சுற்றாடல்

II) *செல்வி.தே.டிலுசியா*
பாடங்கள் : கிறிஸ்தவம்

**தரம் - 3**

I) *செல்வி.கு.தெபோராய்*
பாடங்கள் : தமிழ் , கணிதம், சுற்றாடல்

II) *செல்வி.அ.ஜெமீமா*
பாடங்கள் : சமயம், கிறிஸ்தவம்

III) *செல்வி.றொ.ஜெஸ்சிகா*
பாடங்கள் : ஆங்கிலம்

IV) *செல்வன்.வி.நிதுஷன்*
பாடங்கள் : சைவசமயம்

**தரம் - 4**

I) *செல்வி.ர.றஞ்சிதா*
பாடங்கள் : தமிழ் , சமயம் , கணிதம், சுற்றாடல்

II) *செல்வி.அ.ரேணுகா*
பாடங்கள் : கிறிஸ்தவம்

**தரம் - 5**

I) *செல்வன்.கி.சாருஜன்*
பாடங்கள் : தமிழ் , சமயம் , கணிதம், சுற்றாடல்

II) *செல்வன்.அ.ஜெகுஜெகுட்பிரியன்*
பாடங்கள் : கிறிஸ்தவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடைநிலைப்பிரிவு பரிசு பெறுபவர்கள்

* * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * *

## தரம் - 6

I) *செல்வி.கு.டனிசியா*

*பாடங்கள் : சமயம், தமிழ், ஆங்கிலம், கணிதம், வரலாறு, புவியியல், குடியுரிமைக் கல்வி, சங்கீதம், சுகாதாரம், செயன்முறை தொழில்நுட்பம் , வகுப்பு நிலை*

II) *செல்வன்அ.ஜெஷீரன்*

*பாடங்கள் : கத்தோலிக்கம்.*

III) *செல்வன்.வி.சஜித்தன்*

*பாடங்கள் : சித்திரம்*

IV) *செல்வி. ர.யோதிகா*

*பாடங்கள் : நடனம்*

## தரம் - 7

I) *செல்வி. ஞா.விதுசா*

*பாடங்கள் : சமயம், தமிழ், விஞ்ஞானம், புவியியல், குடியுரிமைக் கல்வி, நடனம், சுகாதாரம் , வகுப்பு நிலை*

II) *செல்வன்.கி.நிதர்சன்*

*பாடங்கள் : கணிதம், வரலாறு*

III) *செல்வி.செ.சசிகலா*

*பாடங்கள் : ஆங்கிலம், செயன்முறை தொழில்நுட்பம், சங்கீதம்*

IV) *செல்வன்.ந.றெனால்ட்*

*பாடங்கள் : கத்தோலிக்கம்.*

V) *செல்வன்.யோ.றதீபன்*

*பாடங்கள் : சித்திரம்*

## தரம் - 8

I) *செல்வி.இ.றொசானா*

*பாடங்கள் : தமிழ், கணிதம், செயன்முறை தொழில்நுட்பம், சங்கீதம், வகுப்பு நிலை*

II) *செல்வி.கே.ரியானா*

*பாடங்கள் : சமயம், விஞ்ஞானம், வரலாறு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

III) செல்வி.உ.விதுசா

பாடங்கள் : ஆங்கிலம், புவியியல்.

IV) செல்வன்.ச.சஞ்சீவன்

பாடங்கள் : சுகாதாரம், சித்திரம், குடியுரிமைக் கல்வி.

V) செல்வி.பி.ஜெனிஸ்ரலா

பாடங்கள் : நடனம்

**தரம் - 9**

I) செல்வி.சொ.பகிதா

பாடங்கள் : சமயம், தமிழ், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், குடியுரிமைக் கல்வி, சங்கீதம், சுகாதாரம், செயன்முறை தொழில்நுட்பம், வகுப்பு நிலை

II) செல்வி.த.பிறிஸ்கா

பாடங்கள் : கத்தோலிக்கம்.

III) செல்வி.சி.கௌதமி

பாடங்கள் : சித்திரம்

**தரம் - 10**

I) செல்வன்.சி.இ.நிறோஜன்

பாடங்கள் : கத்தோலிக்கம், தமிழ், விஞ்ஞானம், புவியியல், வரலாறு, வகுப்பு நிலை

II) செல்வி.க.சரணியா

பாடங்கள் : சமயம், ஆங்கிலம், கணிதம், சங்கீதம், மனைப்பொருளியல்

III) செல்வன்.பி.ஜெனிஸ்ரன்

பாடங்கள் : சுகாதாரம், சித்திரம்.

**தரம் - 11**

I) செல்வி. உ.சுழப்பிரியா (நினைவுப்பரிசு, வெற்றிக்கிண்ணம்)

II) செல்வி .கு.கார்த்திகா

III) செல்வி .வி.பிறின்சிலா

IV) செல்வி .ப.குமுதினி

V) செல்வி .கு.குணதர்சிகா

**தரம் - 11 R**

I) செல்வி.மு.நளாயினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையின் சாதனையாளர்கள்

| இணை பாடவிதான சாதனையாளர்கள் | | | | |
|---|---|---|---|---|
| மாணவர் பெயர் | நிகழ்ச்சி | கோட்டம் | வலயம் | மாகாண மட்ட தெரிவு |
| *செல்வன்.ந.ஜெனிஸ்ரன்* | *1500m ஓட்டம்* | *3ம் இடம்* | | |
| *செல்வி.கேரியானா* | *400m ஓட்டம்* | *1ம் இடம்* | *2ம் இடம்* | √ |
| *செல்வி.ஜெ.ஜெனார்த்தனி* | *1500m ஓட்டம்* | *1ம் இடம்* | *1ம் இடம்* | √ |
| | *800m ஓட்டம்* | *1ம் இடம்* | *1ம் இடம்* | √ |
| | *400m ஓட்டம்* | *1ம் இடம்* | *1ம் இடம்* | √ |
| *செல்வி.கு.நிரோசா* | *800m ஓட்டம்* | *1ம் இடம்* | | |
| | *400m ஓட்டம்* | *1ம் இடம்* | | |
| | *200m ஓட்டம்* | *3ம் இடம்* | | |
| *செல்வன்.க.றதீபன்* | *நீளம் பாய்தல்* | *3ம் இடம்* | | |
| *செல்வி.செ.சசிகலா* | *குண்டு போடுதல்* | *2ம் இடம்* | | |
| | *ஈட்டி எறிதல்* | *3ம் இடம்* | | |
| *செல்வி.வி.பிறின்சிலா* | *ஈட்டி எறிதல்* | *3ம் இடம்* | | |
| **பாடரீதியான சாதனையாளர்கள்** | | | | |
| *செல்வி.கு.டனுசியா* | சமூக விஞ்ஞான போட்டி | *2ம் இடம்* | | |
| செல்வி.வி.பிறின்சிலா | ஆங்கில உறுப்பெழுத்து | *3ம் இடம்* | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மட்ட விளையாட்டு நிகழ்வு வெற்றி வீரர்களுக்கான பரிசு விபரம்

1) 7 வயதுப் பிரிவு

ஆண் - செல்வன்.யோ.நதீசன்

2) 9 வயதுப் பிரிவு

ஆண் - செல்வன்.சி.வினித்

பெண் - செல்வி.பி.சதுஸ்ரலா

3) 11 வயதுப்பிரிவு

ஆண் - செல்வன்.தே.டிலக்சன்

பெண் - செல்வி.அ.ரேணுகா

4) 13 வயதுப் பிரிவு

ஆண் - செல்வன்.க.றதீபன்

பெண் - செல்வி.இ.அஜித்தா

5) 15 வயதுப் பிரிவு

ஆண் - செல்வன்.க.அஜித்

பெண் - செல்வி.கு.நிரோசா

6) 17 வயதுப் பிரிவு

ஆண் - செல்வன்.த.டிலக்சன்

பெண் - செல்வி.கு.குணதர்சிகா

7) 19 வயதுப் பிரிவு

ஆண் - செல்வன்.பா.சுகிர்தன்

பெண் - செல்வி.ஜெ.ஜெனார்த்தனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர் வரவு ஒழுங்கிற்கான பரிசில் விபரம் - 2012

| மாணவர் பெயர் | தரம் |
|---|---|
| சு.சுரேந்தினி | தரம் - 1 |
| கி.நிதுஜா | தரம் - 2 |
| றொ.ஜெஸ்சிகா | தரம் - 3 |
| மு.லக்ஷன் | தரம் - 4 |
| கு.நதீபா | தரம் - 5 |
| கு.டனிசியா | தரம் - 6 |
| யோ.றதீபன் | தரம் - 7 |
| த.பிரசாந் | தரம் - 8 |
| மு.தரிசன் | தரம் - 9 |
| பி.ஜெனிஸ்ரன் | தரம் - 10 |
| கு.குணதர்சிகா | தரம் - 11 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை ஆசிரியர் குழாம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக் கீதம்

******************************

வாழ்க என்றும் வாழ்கவே
உயரப்புலம் மெதடிஸ் மிஷன்
தமிழ்க் கலவன் வித்தியாலயம்

கனிந்த நல்ல பார்வையும்
கமலமென்னவதனமும்
மனதில் நல்ல உறுதியும்

உள்ளமெங்கும் இலட்சியம்
உயர்ந்த நோக்கத் திண்ணமும்
அள்ள அள்ளக் குறைவிலாத அறிவை
ஊற்றும் நிலையமாம்


சிந்தை நாடும் சரித்திரம்
சிறந்த நுட்பநெறிகளும்
தந்தெமக்கு இன்பம் நல்கும்
இனிய கலைப் பீடமாம்


வாய்மை தூய்மை நியாயமும்
வாழ்வில் நீதி நேர்மையும்
பண்பொழுக்கம் அறிவுடன் அன்பு
தியாக சீலமும்

பொங்கு முடல் இளமைநலம்
உடற் பயிற்சியாவுமே
இங்கிதமாய் எமக்களிக்கும்
இனிய வித்தியாலயமாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை நிகழ்வுகளின் பதிவுகள் சில......






கல்விச் சுற்றுலாவின் போது





விளையாட்டு நிகழ்வின் போது





பரிசளிப்பு விழாவின் (2012) போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org